**யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி**

**முதலாந்தவணைப் பரீட்சை – 2012**

**வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்**

**காம் - 7** **நேரம் :- 1.30மணி**

## பகுதி - I

பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க

1. தனித்துவத்தையும் சுயவிளக்கத்தையுமுடைய உயிரினமாகக் கருதப்படுவது
   1. யானை 2. மனிதன் 3. நாய் 4. கிளி
2. நல்ல மனிதப் பண்புகள் நிறைந்த மகாத்மா காந்தியின் வாழ்க்கை பற்றிக் கூறும் நூல்
   1. திருக்குறள் 2. சத்தியசோதனை 3. சிலப்பதிகாரம் 4. பாரதம்
3. நமது வாழ்க்கையை முன்னேற்றுவதற்குரிய முதற்படியாக அமைவது
   1. எமது பெற்றோரை அறிவது 2. எமது வீட்டுச் சூழலை அறிவது
   3. அயற் சூழலை அறிவது 4. எம்மை நாமே அறிவது
4. சுயமதிப்பின் மூலம் வெளிக்காட்டப்படும் நல்ல பண்புகள்
   1. நேர்மை, சுயநலம், ஒழுக்கம் 2. பொறாமை, நம்பிக்கை, அன்புசெய்தல்
   3. ஒழுக்கம், பொதுநலம், நம்பிக்கை 4. பயம், பொறாமை, கோபம்
5. திறமையை வளர்த்து கொள்ளும் வழிகளில் ஒன்று
   1. கூடாத நண்பர்களுடன் சேரல் 2. நேரத்தை விணாக்குதல்
   3. மற்றவர்களுடன் சண்டைபிடித்தல் 4. நல்ல வார்த்தை பேசுதல்
6. சமூகத்தின் மிகச்சிறிய அலகு
   1. குடும்பம் 2. சமூகம் 3. பிரதேசம் 4. நாடு
7. சமூகத்தில் காணப்படும் தீய சக்திகள்
   1. பாடசாலை, கோவில், தேவாலயம் என்பவற்றை மூலம் கிடைக்கும் நன்மையான செயற்பாடுகள்
   2. போதைப்பொருள், மதுபானம், பொருத்தமற்ற ஊடக நிகழ்ச்சிகள்
   3. நற்பண்புகளை விருத்தி செய்தல், ஆபாசப்புத்தகங்கள், கோயில்
   4. விளையாட்டில் ஈடுபட, பொருந்தாத நட்பு, நற்பண்புகளை வளர்த்தல்
8. திட்டமிட்டு செயற்படும் சிறந்த மாணவன் என்பதற்கு அடையாளமாகக் கருதக் கூடியவர்
   1. பாடசாலைக்கு நேரத்திற்கு வருபவர்
   2. வீட்டுப்பயிற்சிகளை பாடநேரங்களில் செய்பவர்
   3. பாடசாலைக்கு சில நிமிடங்கள் பிந்தி வருபவர்
   4. பாடசாலைக்கு ஒழுங்காக வராதவர்
9. சரியான வாழ்க்கை இலட்சியத்தை அடைவதற்கு துணை புரிவது
   1. நாம் விரும்புகின்ற விடயங்களில் பொருத்தமானதை மாத்திரம் தெரிவு செய்து ஈடுபடுவது
   2. வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களின் இலட்சியங்களை அறிதல்
   3. நாம் விரும்பும் அனைத்தையும் செய்தல்
   4. அவசரப்படுதல், ஆராய்ந்து பார்க்காமை போன்ற குணங்கள்
10. தாய், தந்தை, பிள்ளைகள், உறவினர், பாட்டன், பாட்டி ஆகிய மூன்று தலைமுறை அங்கத்தவர் கூடி வாழ்வது
    1. கருக்குடும்பம் 2. விரிந்த குடும்பம் 3. உறவுகள் 4. தனிக்குடும்பம்
11. எனது அப்பாவின் சகோதரி
    1. சித்தி 2. மாமி 3. மச்சாள் 4. மைத்துனி
12. தாய், தந்தையை உம்மா, வாப்பா என அழைக்கப்படும் சமூகம்
    1. சிங்களம் 2. தமிழர் 3. பறங்கியர் 4. முஸ்லீம்கள்

kalvi.lk

சரி, பிழை இடுக

13. நற்பண்புகளை உருவாக்கும் இடம் பாடசாலையாகும் (.......)
14. அப்பாவின் அண்ணா மாமா (.......)
15. பெரியோரைக் கனம் பண்ணுதல் மாணவரின் கடமையாகும்(.......)

கீறிட்ட இடம் நிரப்புக

16. குடும்பத்தின் தலைவராக இருப்பவர்........................ஆவார்.
17. குடும்ப விருத்திக்கு அங்கத்தவர்களின் .................... அவசியம்.
18. அயலவர்கள் ஒத்துழைப்பு வழங்கும் சந்தர்ப்பங்களில் ஒன்று ............. ஆகும்
19. 1989 நவம்பர் 20ம் திகதி ....................... நிறுவனம் சிறுவர் உரிமைச் சாசனத்தை ஏற்றுக் கொண்டது
20. பாடசாலை நிறுவாகத்தின் தலைவர் ..................... ஆவார்

## பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1) 1. முதலாம் தவணையில் நீர் செய்த கணிப்பீடுகள் இரண்டினைப் பெயரிடுக
   2. கணிப்பீட்டுக்காக தெரிவு செய்த அலகுகள் இரண்டினைத்தருக
   3. கணிப்பீட்டுக்காக தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்
   4. பாடவிடயங்களை ஒப்படையாக செய்த போது நீர் பெற்ற நன்மைகள் விபரிக்குக

(12 புள்ளிகள்)

2) 1. எமது தனித்துவத்தை உறுதிப்படுத்தி சுயமதிப்பை ஏற்படுத்த நாம் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் 3 தருக
   2. சமூகத்திலுள்ள தீயசக்திகளால் ஏற்படும் விளைவுகள் 4 தருக
   3. நாம் ஒரு இலட்சியத்தை அடைய நாம் மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் 5 இனைக் குறிப்பிடுக (12 புள்ளிகள்)

3) 1. ஆரோக்கியமான குடும்பத்தில் காணப்படும் 2 பண்புகள் தருக
   2. கருக்குடும்பம், கூட்டுக்குடும்பம் இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள் 3 தருக
   3. விரிந்த குடும்பத்தினால் ஏற்படும் நன்மைகள் 3 தருக?

4) 1. அயலவர் ஒத்துழைப்பு வழங்கும் 4 சந்தர்ப்பங்கள் தருக?
   2. குடும்பம் ஒன்று எதிர்நோக்கும் சவால்கள் 3 தருக?
   3. குடும்பத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் உம்மால் மேற்கொள்ளவேண்டிய பொறுப்புக்கள் 4 தருக?

5) 1. இலட்சியத்தை அடைவதற்கு உம்மிடம் இருக்க வேண்டிய பண்புகள் 3 தருக
   2. சமூகத்தில் காணப்படும் நல்ல சக்திகள் 4 தருக
   3. ஒவ்வொரு தனியாரிடமும் காணப்படும் தனித்துவமான விடயங்கள் 5 தருக

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page